செயற்பொறியாளர் அலுவலகம் பொபது / நீஆது., மணிமுத்தாறு வடிநில கோட்டம்,
தேவகோட்டை அவர்களின் செயல்முறைகள்.
பிறப்பிப்பவர்: பொறி.த.சுப்பிரமணியன், பி.இ.,
செயற்பொறியாளர், பொ.ப.து / நீ.ஆ.து.,

**செயல்முறை ஆணை எண் இ2 / 576 / 2020 / நப5 வரு/ நாள்: 27.1 .2021**

பொருள்: நியமனம் (நேரடி) - தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-20-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு தொகுதி - IV-இல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு- இளநிலை உதவியாளராகப் பணியாற்றி வரும் திருமதி.நே. மாலினி (பிறந்த தேதி: 09.04.1991) - இளநிலை உதவியாளர் பணியினை- பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்.

பார்வை: 1 முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொ.ப.து., சேப்பாக்கம் சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண். எஸ் 3(3)/ 35935/2020/ நாள்.17.09.2020

2 செயற்பொறியாளர், பொ.ப.து/நீ.ஆ.து., மணிமுத்தாறு வடிநில கோட்டம், தேவகோட்டை செயல்முறை ஆணை எண். இ2 /576/2020/ நாள். 21.09.2020

((((()))))

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய, சென்னை கடித எண்.2496/ பி.எஸ்.டி-ஐ/2020/ நாள்-29.05.2020-ன்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-20-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு தொகுதி-IV-இல் அடங்கிய பணிகளுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு, பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 1-இல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப்பொறியாளர், (பொது) பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை அவர்களது செயல்முறை ஆணையின் வாயிலாக இக்கோட்ட அலுவலகத்திற்கு இளநிலை உதவியாளராக பணிநியமனம் ஆணை வழங்கப்பட்டு பார்வை 2-இல் கண்ட இக்கோட்ட அலுவலக செயல்முறை ஆணையின்படி பணியமர்வு ஆணை வழங்கப்பட்டு இக்கோட்ட அலுவலகத்தில் **திருமதி.நே. மாலினி (பிறந்த தேதி: 09.04.1991)-** -இளநிலை உதவியாளர் **28.09.2020 முற்பகல் முதல்** பணியேற்பு செய்துள்ளதை தொடர்ந்து அவர் பணியாற்றி வரும் இளநிலை உதவியாளர் பணியினை தமிழ்நாடு அரசுப்பணியாளர் பணிவிதித்தொகுதி பாகம்-2 பொது விதிகள் விதி எண்.23அ(1)-இன்படி இவர் பணியேற்ற நாள் முதல் பணிவரன் முறை செய்து கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஆணை வழங்கப்படுகிறது.

| மு.த.பொ. சென்னை அவர்களது செ.மு. ஆணையின் பிற்சேர்க்கை வரிசை எண். | தேர்வாணைய வரிசை எண் | பெயர் மற்றும் பதவி | பிறந்த தேதி | இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 07 | 41 | நே.மாலினி இளநிலை உதவியாளர் | 09.04.1991 | 28.09.2020 முற்பகல் | 28.09.2020 முற்பகல் |

த.பி.பா...

Scanned with CamScanner

2. தனியரது பணிப்பதிவேட்டின்படியும் மற்றும் இவ்வலுவலக ஆவணங்களின்படியும் பணிவரன்முறையினை பாதிக்கும் வகையில் இவர் மீது எந்தவிதமான குற்றச்சாட்டுகளோ அல்லது ஒழுங்கு நடவடிக்கைகளோ ஏதும் இல்லை மற்றும் எந்தவித ஊதியமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

3. மேற்கண்ட இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டதை தொடர்ந்து தேர்வாணைய கடிதம் பத்தி 5-இல் குறிப்பிட்டுள்ளபடி டபிள்யூ.பி.தொகுப்பு நான்கு 2018-19 மற்றும் 2019-20-ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு குறித்து சென்னை உயர்நீதி மன்றம் / சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்கின் தீர்ப்பின் நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

4. இவர் தகுதிகாண் பருவகாலத்தை மூன்றாண்டு கால தொடர்பணியில் தமது இரண்டாண்டு கால பணிக்காலத்தை திருப்திகரமாக நிறைவு செய்திட வேண்டும் எனவும் அக்காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படை பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என்ற நிபந்தனையுடன் இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது.

27.1.21

செயற்பொறியாளர், பொ.ப.து/நீ-ஆ-து-,
மணிமுத்தாறு வடிநில கோட்டம் , தேவகோட்டை
27.1.2021

பெறுநர்
திரு. மாலினி
இளநிலை உதவியாளர், பொபது/நீஆது
மணிமுத்தாறு வடிநில கோட்டம்
தேவகோட்டை.

Scanned with CamScanner